**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத்துறை**

**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம், கோவை**

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(05.08.2023 முதல் 09.08.2023)**

**அறிக்கைஎண் 062/2023** **தேதி.04.08.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 18°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 01.08.23 முதல் 03.08.23 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 32°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 76 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 61 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாககாற்றின் வேகம் மணிக்கு 19-25 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்குதிசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (01.08.2023 முதல் 03.08.2023) | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 09.08.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01/08 | 02/08 | 03/08 | தேதி | நாள்-1 05/08 | நாள்-2 06/08 | நாள்-3 07/08 | நாள்-4 08/08 | நாள்-5 09/08 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 2 | 1 | 4 | 2 | 0 |
| 33 | 34 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 34 | 33 | 33 | 33 |
| 24 | 23 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 23 | 23 | 23 |
| 6 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டர்) | 6 | 5 | 7 | 7 | 8 |
| 81 | 72 | 74 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 59 | 61 | 64 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 40 | 40 | 30 | 30 |
| 24 | 19 | 25 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 10 | 10 | 12 | 8 |
| 200 | 230 | 230 | காற்றுவீசும் திசை | 270 | 270 | 250 | 250 | 270 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (05.08.2023 முதல் 09.08.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த நான்கு நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின்

வேகம் மணிக்கு 8-12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

| ஈரோடுமாவட்டத்தில் உள்ளதொகுதிவாரியாகஉள்ள அடுத்தஐந்துநாட்களுக்கானமழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| 05-08-2023 | 0.0 | 0.0 | 0.0 | 9.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 5.0 | 2.0 | 3.0 |
| 06-08-2023 | 0.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 07-08-2023 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 08-08-2023 | 6.0 | 4.0 | 3.0 | 6.0 | 3.0 | 3.0 | 4.0 | 6.0 | 3.0 | 3.0 | 3.0 | 4.0 | 0.0 | 4.0 |
| 09-08-2023 | 3.0 | 2.0 | 2.0 | 2.0 | 2.0 | 1.0 | 2.0 | 4.0 | 2.0 | 1.0 | 2.0 | 2.0 | 0.0 | 2.0 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு லேசான மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 8-14 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது. மண் ஈரத்தினைப் பொறுத்து நீர்பாசனம் செய்யவும். |
| நிலக்கடலை | பூக்கும் பருவம் | மண்ணில் போதிய ஈரப்பதம் இருக்கும் பட்சத்தில் 45வது நாள் வயதுடைய நிலக்கடலைக்கு களை எடுத்து எக்டருக்கு ஜிப்சம் 500 கிலோ என்றளவில் இட்டு மண் அணைக்கவும். |
| கரும்பு | | மழையுடன் வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். |
| கொடி பூசணி வகைகள் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி மண் ஈரத்தினைப் பொறுத்து கொடி பூசணி வகைகளை விதைக்கவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | லேசான மழையுடன் மணிக்கு 8 - 14 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும். |
| மஞ்சள் | வளர் பருவம் | மஞ்சளில் நுண்ணூட்டசத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பெரஸ்சல்பேட், துத்தநாக சல்பேட் மற்றும் போராக்ஸ் ஒவ்பொன்றும் 375 கிராமினை 250 லிட்டர் தண்ணீரில் கலந்து இரண்டு முறை 25 நாள் இடைவெளியில் தெளிக்கவும். |
| கால்நடை | | காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழிகளின் தீவனங்கள் சிதற வாய்ப்புள்ளது. எனவே காற்றின் வேகத்தை குறைக்க கோழிக்கூடாரங்களில் சுற்றிலும் சாக்கு பைகளை தொங்கவிடவும். |

## குறுஞ்செய்தி

- எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி மண் ஈரத்தினைப் பொறுத்து கொடி பூசணி

முதன்மைஅலுவலர் (GKMS)
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை